**கவனிக்க.**-2019.01.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2106 - 2019 ජනවාරි මස 11 වැනි සිකුරාදා - 2019.01.11

*2106 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 44 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 50 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, சனவரி மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


41-B 81484-5,403 (2019/01)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

**சட்ட அதிகாரி (நிறைவேற்று அதிகார சேவையில் III ஆம் தரம்) பதவிக்காக திறந்த முறையில் இணைத்துக் கொள்ளல்**

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் சட்ட அதிகாரி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*01.* **இணைத்துக் கொள்ளும் முறை.-**

*அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் முடிவின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரி இப்பதவி வெற்றிடத்துக்கு இணைத்துக் கொள்ளப்படுவர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட (இல. 06 இன் கீழ்) புள்ளி முறைமைக்கமைய கட்டமைப்பு நேர்காணல் இடம்பெறும்.*

*02.* ***தகைமைகள்.-***

(i) ***கல்வி/தொழில் தகைமைகள் :***
*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டக் கல்வியில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பிரமாணம் வழங்கி இருத்தல்.*

(ii) ***அனுபவம்.-***
*சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் வழங்கியதன் பின்னர் மூன்று (3) ஆண்டுகளுக்கு குறையாது குறித்த துறையில் தொழில் அனுபவம் பெற்றிருத்தல். (தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக முன்வைக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பற்றிய காலம், திகதி மற்றும் பதவி முத்திரை ஆகியன தெளிவாக குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)*

(iii) ***உடல் நிலைத் தகைமை:***
*ஒவ்வொரு விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவை செய்யக்கூடிய உடல் மற்றும் உளநிலைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

(iv) ***ஏனைய தகைமைகள் :***

- *இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;*
- *சிறந்த நற்பண்புள்ளவராக இருத்தல்;*
- *ஏதேனும் மதத்தில் துறவு பூண்டவர்களுக்கு இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது;*
- *விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் இப்பதவிக்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (விண்ணப்பத்துடன் தகைமைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு சான்றிதழ்களின் பிரதிகள் முன்வைக்கப்படல் வேண்டும்.)*

*03.* **சேவையில் ஈடுபடுத்தல் கொள்கை மற்றும் சேவை நிபந்தனைகள்:**

(i) *இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு உட்பட்டவராயிருத்தல். மேலும், நீங்கள் விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் மாற்றங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பங்களிப்பு வழங்கப்படல் வேண்டும்;*

(ii) *இந்த நியமனமானது, மூன்று (03) வருட பயிற்சிக் காலத்தை உள்ளடக்கியது. இந்நியமனத்திற்கு இணைத்து மூன்று வருட காலப்பகுதிக்குள் முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.*

(iii) *2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இல் குறிப்பிடப்பட்டுள்ளதும் மற்றும் அதன் இணைப்பு சுற்றறிக்கைகளின் அடிப்படையிலும் இந்த நியமனத்தை பெற்றுக் கொண்ட தினம் தொடக்கம் ஐந்து வருட*

காலம் பூர்த்தியடைய முன்னர் இச்சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழி மூலத்திற்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் குறித்த மட்டத்திலான தேர்ச்சியையும் மற்றும் அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் இணைத்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர் அவரது பயிற்சிக் காலத்திற்குள் அரச கரும மொழிகளில் குறித்த மட்டத்திலான தேர்ச்சியையும் பெறுதல் வேண்டும்.

(iv) இந்நியமனமானது, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தாபன செயற்பாட்டு விதிமுறைகள், நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் மற்றைய திணைக்கள கட்டளைகளுக்கும் உட்பட்டதாகும்.

04. **வயதெல்லை:**

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

05. **சம்பள அளவுத்திட்டம் :**

மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,616 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 1,10,895.00 ஆகும். (2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கையின் சம்பள உபபாகம் 1 - SL -1-2016 இற்கமைவானது. இச்சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பட்டியல் II இற்கமைய சம்பளங்கள் வழங்கப்படும்.)

06. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படும்:

| இல. | விடயம் | புள்ளிகள் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் சட்டம் தொடர்பான பட்டம்<br>- முதற் தரத்தில் சித்தி அடைதல்<br>- இரண்டாம் தரத்தில் (மேல் மட்டம்) சித்தி அடைதல்<br>- இரண்டாம் தரத்தில் (கீழ் மட்டம்) சித்தி அடைதல்<br><br>சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் முதல் தரத்தில் சித்தி பெறல்<br>சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டில் இரண்டாம் தரத்தில் சித்தி பெறல்<br><br>**குறிப்பு**.- இறுதிப் பரீட்சையில் சிறப்பு தரம் மாத்திரம் பெற்றிருப்பின் 10 புள்ளிகள் வழங்கப்படும். (உயர் தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். பட்டம் அல்லது சட்டக் கல்லூரி தகைமைகளில் ஏதேனும் ஒன்றிற்கு மாத்திரமே) | <br><br><br>20<br>15<br>10<br><br>15<br>10 | 20 |
| 02 | **தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம்**<br><br>I. தொழில் தகைமைகள் :<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட குறித்த துறை தொடர்பிலான பட்டப்பின் டிப்ளோமா அல்லது சட்டம் தொடர்பிலான பட்டப் பின் டிப்ளோமா பாடநெறி (டிப்ளோமா ஒன்றிற்கு 05 புள்ளிகள் வீதம்)<br><br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் குறித்த துறை தொடர்பிலான ஆறு மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறி (டிப்ளோமா ஒன்றிற்கு 03 புள்ளிகள் வீதம்)<br><br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் குறித்த துறை தொடர்பிலான மூன்று மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறி (சான்றிதழ் பாடநெறி ஒன்றிற்கு 02 புள்ளிகள் வீதம்) | | 15 |

| இல. | விடயம் | புள்ளிகள் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| | II. **மேலதிக அனுபவம் :**<br>சட்ட வழக்கறிஞராக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் அனுபவம்<br>- ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகபட்ச புள்ளிகள் 30<br>- 06 மாதங்களுக்குக் குறையாமலும் ஒரு வருடத்திற்கு மேற்படாமலுமிருப்பின் 02 புள்ளிகள்<br>(அடிப்படை தகுதியை அடைதல் தொடர்பில் சட்ட வழக்கறிஞராக தேவையான மூன்று வருட சேவைக்காலம் தவிர்த்து)<br>(இருபது வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்துடன் சட்டத்தரணியாக அல்லது சனாதிபதி சட்டத்தரணியாக அல்லது நீதிபதியால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவம் உறுதி செய்யப்படல் வேண்டும்.)<br>(02 II இன் கீழ் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அரச அல்லது தனியார் துறையிலுள்ள உத்தியோகத்தர்களது நிறுவனத் தலைவர் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்படும்வகையில் சேவைச் சான்றிதழ் மூ லம் உறுதி செய்யப்படல் வேண்டும்.) | | 30 |
| 03 | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு** | | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்தில் தகவல் தொழில் நுட்பத்தை பிரதான பாடமாக தெரிவு செய்திருத்தல். | 15 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒரு (01) வருடம் அல்லது 1500 மணித்தியாலத்திற்கு குறையாமல் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி | | |
| | 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள் | 07 | |
| | 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 05 | |
| | (உயர் தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 04 | **ஆங்கில மொழித்திறன்**<br>ஆங்கில மொழி மூலம் மேற்கொள்ளப்பட்ட முதுநிலை பட்டம்/ பட்டம்/சட்ட முதுநிலைப் பட்டம்/சட்டம் தொடர்பான பட்டம் | 15 | 15 |
| | (உரிய பரீட்சை வினாத்தாள் அனைத்தும் ஆங்கில மொழியில் விடையளித்திருத்தல் வேண்டும்.)<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி (01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி | | |
| | 06 மாதங்கள்/720 மணித்தியாலங்கள் | 07 | |
| | 03 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 05 | |
| | (உயர் தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்) | | |

| இல. | விடயம் | புள்ளிகள் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 05 | நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமைகள் | | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | | 100 |

07. **விண்ணப்பதாரியை அடையாளப்படுத்தல்:**

விண்ணப்பத்தில் எல்லாத் தகவல்களையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதி மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது தமது அடையாளத்தை சான்றுப்படுத்த கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

08. **விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் :**

(i) விண்ணப்பங்கள் 2019.02.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். குறித்த தினத்திற்கு பிறகு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு,
'மகநெகும மஹமெதுர',
இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்தை,
பத்தரமுல்லை.

(ii) மாதிரி விண்ணப்பமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவம் A4 கடதாசியில் தயாரிக்கப்பட்டு 01 தொடக்கம் 08 வரை முதல் பக்கத்திலும் 09 தொடக்கம் 12 வரை இரண்டாம் பக்கத்திலும் மீதியை மூன்றாம் பக்கத்திலும் தமது கையெழுத்தில் தெளிவாக விண்ணப்பம் நிரப்பப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட அதிகாரி பதவிக்காக விண்ணப்பித்தல்" என குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது ரூபா 47,615 அல்லது அதற்கு அதிகமான மாதாந்த சம்பளம் பெறும் அரசாங்க நிரந்தர அதிகாரி ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண சேவையில் ஈடுபடுவோராயின் தாம் பணி புரியும் திணைக்கள தலைவர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

(vi) குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்புடையதற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். காலதாமதங்கள், காணாமல் போதல் பற்றி கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

09. **தவறான தகவல்களை வழங்குதல் :**

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் தகவல்கள் பொய்யானதாகவோ அல்லது தவறானதாகவோ இணைக்கப்படும் முன்னர் இனங்காணப்பட்டால் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் இனங்காணப்பட்டால் அதற்குரிய செயற்பாடுகளின்படி சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இப்பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதும் அல்லது நிரப்பாததும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்.

11. இந்த அமைச்சின் சட்ட அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்களை கோரும் பொருட்டு 2018.08.27 ஆந் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு,
பத்தரமுல்லை.
2019.01.02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் சட்ட அதிகாரி பதவிக்கு இணைத்துக் கொள்ளல்**

இல. :...........................................
(அலுவலக பாவனைக்கு மட்டும்).

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி):...........................................

சிங்களத்தில் :.............................................................

ஆங்கிலத்தில் :........................................................

1.1 முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்)
சிங்களத்தில் :.............................................................
ஆங்கிலத்தில் :........................................................

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :.......................................................

3. பிறந்த திகதி :-

வருடம் :............................ மாதம் :........................ திகதி :........................

4. பால் (ஆண்-M, பெண்-F): ☐

5. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில் எழுதவும்) :........................................................

6. தொலைபேசி இலக்கம் நிரந்தர :...................... கையடக்க :..............................

7. கல்வித் தகைமைகள் :

7.1 க.பொ.த.(உயர்தரம்) பரீட்சையின் விபரங்கள்:

(a) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ...................................
(B) சுட்டெண் : ...............................
(C) சித்திபெற்ற பாடங்கள் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

7.2. பதவியுடன் தொடர்புடைய தகைமைகள் :

| தொடர்புடைய தகைமை | தகைமை பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் பெயர் | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |

7.3 மேலதிக தகைமைகள் :

8. அனுபவம்:
1. உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சேவைக் காலம் :.......................................................

9. நீதிமன்றத்தால் நீங்கள் குற்றவாளியாக கண்டறியப்பட்டுள்ளீர்களா? ஆம்/இல்லைல

9.1 ஆம் எனில், அதற்கான விபரத்தைத் தருக :........................................................

9.2 உறவினர்கள் அல்லாத நடுவர்கள் பெயர்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் : | 2. | பெயர் : |
| | பதவி : | | பதவி : |
| | முகவரி : | | முகவரி : |
| | தொலைபேசி இல. : | | தொலைபேசி இல. : |

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள விபரம் பொய்யானது அல்லது தவறானது என நியமிக்கப்படுவதற்கு முன் கண்டறியப்பட்டால் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் கண்டறியப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

(இ) இதில் கொடுக்கப்பட்டுள்ள யாதேனும் தகவல்களை நான் பின்னர் மாற்ற மாட்டேன்.

.........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :........................................................

11. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள ................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், மேலே பந்தி 10 இற்கிணங்க .................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :........................................................

உறுதிப்படுத்துபவரின் பெயர் :........................................................
பதவி :........................................................
முகவரி :........................................................
(பதவி முத்திரையின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

12. திணைக்களத் தலைவர் மூலம் உறுதிப்படுத்தல் (அரச சேவை/மாகாண அரச சேவை/அரச கூட்டுத்தாபனத்தில் கடமை புரியும் விண்ணப்பதாரிகள் மட்டும்)

12.1 உத்தியோகத்தரின் தனியாள் கோவைக்கிணங்க கடந்த ஐந்து வருடங்களுக்கான வேலை வரலாறு, நடத்தை மற்றும் வரவு திருப்திகரமானது/திருப்திகரமற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார்/பெற்றுக்கொள்ளவில்லை. இவ்வுத்தியோகத்தர் ஒழுக்க நடடிக்கை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்/உட்படுத்தப்படவில்லை.

12.2 விண்ணப்பித்துள்ள பதவிக்கு இவ்வுத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும் என்று பரிந்துரை செய்கின்றேன்/பரிந்துரை செய்யவில்லை.

....................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :........................................................

**குறிப்பு**.- விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்: அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரிகள் உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரொருவர் ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரர்கள் தனது கையொப்பத்தை சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் ரூபா 2,40,360 இற்குக் குறையாத வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரை தலைமைப் பிக்கு அல்லது பிற மதத் தளங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர்கள் அல்லது அரசாங்க சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றின் உத்தியோகத்தர் ஆகியோர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

*இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அமெச்சூர் வானொலி இயக்குநர்களின் திறமைச் சான்றிதழ்களுக்கான பரீட்சை - 2019*

***திறமைச் சான்றிதழ்களுக்கான வகைகள் :***

(அ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் உயர்தர வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;

(ஆ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் பொது வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;

(இ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் புதுப் பயிலுநர் திறமைகாண் சான்றிதழ்.

2. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்.**- இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் ஒவ்வொருவரும் பதினான்கு (14) வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3. **பரீட்சைத் திட்டம் :**

(அ) ***உயர்தர வகுப்பு.***- பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது :-

*பகுதி 1* : இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - உயர் மின்னியல்தொழில் நுட்ப வானொலித் தொலைத் தொடர்புகள் - (3 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அவதான நடவடிக்கை முறைகள் - (2 மணித்தியாலங்கள்)

*பகுதி 2* : செயல் முறை மோர்ஸ் (Morse) கோட் பரீட்சை (ஒரு நிமிடத்தில் 05 சொற்கள்)

(ஆ) ***பொது வகுப்பு.***-

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல் தொழில்நுட்ப வானொலித் தொலைத் தொடர்புகள் (2 மணித் தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள் அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலம்)

(இ) ***புதுப் பயிலுநர்.***-

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல், வானொலி மற்றும் இலத்திரனியல் கோட்பாடுகள் - (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள் அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலம்)

4. **பரீட்சைகளுக்கான நிபந்தனைகள்.**- எல்லாத் திறமைச் சான்றிதழ்களின் பகுதிகளுக்கும் பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(i) பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் எல்லாப் பகுதிகளிலும் சித்தியடைதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பகுதி 1 இல் (இரண்டு எழுத்துமூல வினாத்தாள்கள்) ஒரே அமர்வில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) இப்பரீட்சையின் பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டுமே பகுதி 2 இற்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்;

5. **பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்.**- இப்பரீட்சை ஆங்கில மொழிமூலம் மாத்திரம் நடாத்தப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்கள் தங்களின் பரீட்சைக் கட்டணங்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் விபரங்கள் தேவைப்படின் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துடன் எழுத்துமூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பரீட்சைக் கட்டணமானது இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பேரில் காசுக்கட்டளை யாகவோ அல்லது எந்தவொரு வங்கியினதும் காசோலை யாகவோ செலுத்தப்படலாம்.

விண்ணப்பப்படிவமானது, பதியப்பட்ட ஒப்படைப்பு மூலம் அல்லது பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது நேரடியாகக் கொண்டுவந்து கொடுக்கப்படுதல் வேண்டும். உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும். ஏனெனில் தபால் மூலம் அனுப்பப்பட்டதற்கான அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்டதற்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி விண்ணப்பப்படிவமொன்று கவனிக்கப்படவில்லை அல்லது தொலைந்து போயிற்று என்ற உரிமைக் கோரிக்கை எதனையும் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கவனத்திற்கொள்ளாது. கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. அத்துடன் அவை ஒரு பரீட்சையிலிருந்து பிந்திய திகதியொன்றில் இன்னொரு பரீட்சைக்கும் மாற்றப்படமுடியாது. தமது விண்ணப்பத்தை மீளப்பெறுகின்ற அல்லது ஏதேனும் காரணத்துக்காக பரீட்சைக்குத் தோற்றமுடியாத பரீட்சார்த்தி எவரும் ஏதேனும் பிந்திய நுழைவுக்காக முழுப் பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

| பரீட்சையின் வகை | பகுதி 1 இற்கான கட்டணம் ரூபா | பகுதி 2 இற்கான கட்டணம் ரூபா |
|---|---|---|
| உயர்தர வகுப்பு | 276 | 138 |
| பொது வகுப்பு | 138 | - |
| புதுப்பயிலுநர் வகுப்பு | 138 | - |

**குறிப்பு**.- அனைத்து அரச வரிகளும் மற்றும் *கட்டணங்கள்* உட்பட.

7. **விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி**.- பரீட்சை வருடத்தில் ஒரு முறை நடாத்தப்படும். பரீட்சைத் திகதி, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் தோதான நுழைவுப் படிவத்தில் செய்யப்படல் வேண்டும். அப்படிவங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பெறப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டு அம்முகவரிக்கு விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும் :-

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்,
276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08.

| சான்றிதழ்களின் வகை | இறுதி நுழைவுத் திகதி |
|---|---|
| உயர்தர வகுப்பு | 2019.01.01 |
| பொது வகுப்பு | |
| புதுப்பயிலுநர் வகுப்பு | |

8. **அத்தாட்சிப்படுத்தல்**.- பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வரும் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் :-

சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, தரைப்படை, கடற்படை அல்லது வான்படை ஆகியவற்றின் ஆணையளிக்கப்பட்ட அலுவலர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர், அரசாங்க சேவையில் ஆண்டொன்றுக்கு ரூபா 4,93,920.00 க்குக் குறையாத திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர்.

இவ்வாறு அமையாத மற்றைய விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

9. **பரீட்சார்த்திகளை அடையாளம் காணல்**.- பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவர் தமது ஆளடையாளத்தைக் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுவார். அதற்காக பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) அஞ்சல் மா அதிபதியால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆளடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(இ) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.

எல்லாப் பரீட்சார்த்திகளும், 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கப் பரீட்சைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயல்படுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

இவ்விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் ஏற்பாடு செய்யப்படாத விடயம் எதுவும் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கப் படும்.

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைத் தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
இல. 276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08,
2019, சனவரி 01.

01-332

திருத்தம்

**திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு**

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

**தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் / தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் 5 மற்றும் 6 ( NVQ Level 5/6 ) டிப்ளோமா மட்ட பாடநெறிகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் - 2019**

2018.12.21 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2,103 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 2019 ஆம் ஆண்டில் மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலுடன் தொடர்பானது.

2. மேற்குறிப்பிடப்பட்ட அறிவித்தலில் கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரிக்கு மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வெளியிடப்பட்ட பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுவதுடன், அதற்கேற்ப விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரியில் 2019 ஆம் கல்வியாண்டுக்கு மாணவர்களைச் ஆட்சேர்த்துக் கொள்ளும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2019.01.25 என்பதையும் தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

3. அத்துடன் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமாவுக்காக குறிப்பிடப்பட்டுள்ள அனுமதித் தகைமைகளும் பின்வருமாறு திருத்தப்பட வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பீ.என்.கே. மலலசேகர,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்.

த.பெ.இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
www.dtet.gov.lk

| தொடர் இல. | பாட நெறிக் குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை | நடைபெறும் தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரி | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள்<br>முழுநேரப் பாடநெறி<br>வயது 17 இற்கும் 29 இற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்<br>பகுதிநேரப் பாடநெறி<br>17 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும் |
|---|---|---|---|---|
| 01. | ETB 07 | தன்னியக்க மோட்டார் வாகன (ஒட்டோமொபைல்) தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா<br><br>NVQ மட்டம் 5<br><br>முழு நேரம் பகல் 1 ½ வருடங்கள்<br><br>(அடிப்படை கற்கைநெறியும் அடங்கும்) | **ஆங்கில மொழிமூலம்**<br><br>கம்பஹா | ➢ தன்னியக்க மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர்<br>➢ தன்னியக்க மோட்டார் வாகன மின்னியலாளர்<br>➢ தன்னியக்க மோட்டார் வாகன வர்ணம் பூசுபவர்<br>➢ மோட்டார் சைக்கிள் இயந்திரத் திருத்துனர் மற்றும் முச்சக்கர வண்டி இயந்திர திருத்துனர்<br>➢ முச்சக்கர வண்டி இயந்திர திருத்துனர்<br>மேற் காட்டப்பட்டுள்ள பாடநெறிகளில் ஒன்றில் NVQ மட்டம் 3/4 சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |

| தொடர் இல. | பாட நெறிக் குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை | நடைபெறும் தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரி | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள்<br>முழுநேரப் பாடநெறி<br>வயது 17 இற்கும் 29 இற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்<br>பகுதிநேரப் பாடநெறி<br>17 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும் |
|---|---|---|---|---|
| | | (This course includes study on proper functioning and maintenance of automobile, two stroke and four stroke engine operating systems and other sub systems related to them) | | அல்லது<br>க.பொ.த.(உ.த.) பொறியியல் தொழில்நுட்பம்/ கணிதம் / விஞ்ஞானம் போன்ற பாடத்துறைகளில் இருந்து குறைந்தது மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல். (க.பொ.த. (உ.த.) பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் கல்வி கற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)<br>அல்லது<br>கலைப்பிரிவில் வன் தொழில்நுட்பவியலின் கீழ் **(Hard Technology)** இயந்திர தொழில் நுட்பம் **(Mechanical Technology)** பாடத்தில் திறமைச் சித்தியுடன் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 02 | ETA 28 | இலத்திரனியல் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா<br>NVQ மட்டம் 5 மற்றும் மட்டம் 6 இணைந்து நடத்தப்படும்<br>முழு நேரம் பகல் 2 ½ வருடங்கள்<br>(அடிப்படை கற்கை நெறியும் அடங்கும்) | **ஆங்கில மொழிமூலம்**<br>கம்பஹா | அரச அங்கீகாரம் பெற்ற ஏதேனும் தொழில் பயிற்சி நிறுவனத்திலிருந்தும் துறைக்கு உரித்தானதாக NVQ மட்டம் 3/4 பாடநெறியொன்றைக் கற்று சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>க.பொ.த. (உ.த.) பொறியியல் தொழில் நுட்பம்/ கணிதம் / விஞ்ஞானம் போன்ற பாடத்துறைகளில் இருந்து குறைந்தது மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல். |
| 03. | ETA 19 | விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா<br>NVQ மட்டம் 5 மற்றும் மட்டம் 6 இணைந்து நடத்தப்படும்.<br>முழு நேரம் பகல் 2 ½ வருடங்கள்<br>(அடிப்படை கற்கைநெறி அடங்கும்)<br>(This course includes nursery farm, establishment Activities, primary processing of livestock, production, Agricultural products, and Agronomic practices of plantation crops, field crops.) | **ஆங்கில மொழிமூலம்**<br>குளியாப்பிட்டி<br>தம்புள்ளை<br>சம்மாந்துறை | ➢ நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்<br>➢ கள உதவியாளர் (விவசாயம்)<br>மற்றும்<br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் விவசாயம் உள்ளிட்ட ஆறு (06) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல், மற்றும் பின்வரும் பாடங்களில் நான்கில் (04) திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். முதல்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் சமூகக் கல்வி அல்லது விவசாயம், தோட்ட விஞ்ஞானம், கால்நடை வளர்ப்பு, உணவுத் தொழில்நுட்பம், நன்னீர் உயிரியல் வள தொழில்நுட்பம் போன்ற பாடங்களுள் ஒன்று உள்ளிட்ட<br>அல்லது |

| தொடர் இல. | பாட நெறிக் குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை | நடைபெறும் தொழில்நுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரி | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள்<br>முழுநேரப் பாடநெறி<br>வயது 17 இற்கும் 29 இற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்<br>பகுதிநேரப் பாடநெறி<br>17 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும் |
|---|---|---|---|---|
| | | | | க.பொ.த. (உ.த.) தொழில்நுட்பம்/ விஞ்ஞானம் போன்ற பாடத்துறைகளில் இருந்து குறைந்தது மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல். (க.பொ.த. (உ.த.) தொழில்நுட்பப் பிரிவில் விவசாயப் பாடத்தைக் கற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)<br><br>அல்லது<br><br>கலைப் பிரிவில் மென் தொழில்நுட்பவியலின் கீழ் **(Soft Technology)** விவசாயத் தொழில் நுட்பம் **(Agro Technology)** அல்லது வன் தொழில்நுட்பவியலின் கீழ் **(Hard Technology),** இயந்திரத் தொழில்நுட்பம் **(Mechanical Technology)** ஆகிய பாடங்களுள் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

01-271

---

## நீதிச் சேவை ஆணைக்குழு

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம் /தமிழ் ) (சிங்களம் /ஆங்கிலம்) (தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2018

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையுடைய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சையானது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பரீட்சையினை ஒத்தி வைப்பதற்கான அல்லது செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2. **சேவை நிபந்தனைகள்:**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 2018.09.11 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக்குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

*2.2* *இந்நியமனமானது மூன்று வருட தகுதிகூர் காலத்தை கொண்டதாகும். நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு 05 வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.*

*2.3* *தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் /அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக உள்ளது.*

*3.* ***சம்பளம்*** : 03/2016 *மற்றும் அதற்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2016.06.24 ஆந் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386 ஆம் இலக்க சுற்றுநிரூபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் தரம்* III *இற்குரிய* (MN 2 -2016 ) *ரூ.* 28,940 – 10 x 300 – 11 x 350 – 10 x 560 – 10 x 660 - *ரூ.* 47,990 *(ஆரம்ப சம்பளம் ரூ. 28,940) ஆவதுடன் அச்சம்பளம் 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் உரித்தாகும். மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் அட்டவணை* II *இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.*

*4.* *இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. பகிரங்க சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் பதவிகள் ஓய்வூதியத்துடனானவை என மேலே குறிப்பிடப்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் தரம்* III *இல் நியமனம் பெறும் உத்தியோகத்தர்களுக்குரிய ஓய்வூதிய முறைமையானது அரசாங்கத்தினால் மற்றும் / அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களால் நிர்ணயிக்கப்படும்.*

5. ***தகைமைகள்*** :

*அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் தரம்* III *இற்குரிய பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

*(அ)* *இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;*

*(ஆ)* *விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 32 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்;*

*(இ)* *நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;*

*(ஈ)* *அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.*

*(உ)* *கீழ்வரும் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

(I) *சிங்களம், தமிழ், ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுக்கு மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களுக்கு திறமை சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

*மற்றும்*

(II) *கல்விப் பொதுத்தராதர (உயர் தரப்) பரீட்சையின் சகல பாடங்களிலும் (பொது அறிவு பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து ) ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே தடவையில் மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் போதுமானதாகும்.)*

(III) *ஏனைய சர்வதேச மொழிகளில் கொண்டிருக்கும் அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.*

***குறிப்பு*** – *சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2019, சனவரி 11 ஆந் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

6. **பரீட்சை நடபடிமுறைகள்:**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தமக்குரிய ஒரு மொழியை மாத்திரம் தெரிவு செய்ய வேண்டியதுடன் பரீட்சைக்குரிய சகல வினாப்பத்திரங்களுக்கும் அம்மொழி மூலமே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

இப்பரீட்சையானது மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | மொழித்திறன் | 100 | 40 |
| 02. | உளச்சார்பு | 100 | 40 |
| 03. | மொழிமாற்றம் | 100 | * |

(* வெற்றிடங்களின் எண்ணக்கையினை கருத்திற் கொண்டு "மொழிமாற்றம்" பரீட்சையில் சித்திபெற வேண்டிய புள்ளி மட்டமானது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

பரீட்சைக்கான பாடத்திட்டம் -

1. **மொழித் திறன் :**

இவ்வினாப்பத்திரம் அபேட்சகர்களின் கருத்து தெரிவித்தல், கிரகித்தல், எழுத்தறிவு, மொழி மற்றும் கட்டுரை, கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வரைபுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பயன்பாடு தொடர்பிலான அறிவை பரீட்சிக்கும் விடயரீதியான வினாக்களைக் கொண்டதாகும்.

2. **உளச்சார்பு :**

இவ்வினாப்பத்திரமானது விண்ணப்பதாரிகளின் எண் சார்ந்த திறன், தர்க்கிக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை அளவிடும் வகையிலான விடயப்பரப்பிற்குரிய வினாக்களைக் கொண்டதாக அமையும்.

3. **மொழிமாற்றம் :**

சிங்களம் / ஆங்கில மொழிக்கு
ஆங்கிலம் / சிங்கள மொழிக்கு
சிங்களம் / தமிழ் மொழிக்கு
தமிழ் / சிங்கள மொழிக்கு
தமிழ் / ஆங்கில மொழிக்கு
ஆங்கிலம் / தமிழ் மொழிக்கு

**குறிப்பு** : தெளிவற்ற கையெழுத்தைக் கொண்ட விடைப்பத்திரங்களுக்கான புள்ளிகள் குறைக்கப்படும். இவ்வினாப்பத்திரங்கள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டமைப்பு ரீதியான கட்டுரை வினாக்கள், கட்டுரை வினாக்கள் / பிரயோக ரீதியான வினாக்களைக் கொண்டவையாகும்.

(மொழிமாற்றம் பரீட்சைக்காக தாம் விண்ணப்பிக்கும் பிரிவிற்குரிய வினாப்பத்திரத்தை தெரிவு செய்தல் வேண்டும். கடமை நிமித்தம் விண்ணப்பதாரிக்குள்ள தகைமைகள் மற்றும் திறன்களை பரீட்சிக்கும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.)

7. பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளில், உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து கீழ்நோக்கிய புள்ளி ஒழுங்கினை பின்பற்றி, தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் அப்பரீட்சைக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படலாம். எவ்வாறெனினும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் குறித்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்படலாம்.

பரீட்சை பெறுபேறுகள் - நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலம் பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்படும்.

8. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை :**

விண்ணப்பதாரர் ஒருவர் தகைமைகளை கொண்டிருக்கவில்லை என பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதேனும் சந்தர்ப்பத்தில் தெரியவருமாயின் அவருடைய பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படுவதற்கு வாய்ப்புள்ளது. விண்ணப்பதாரர் ஒருவர் வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளமை தெரியவருமாயின், அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருப்பின் பகிரங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

9. **பரீட்சைக் கட்டணம்** : பரீட்சைக் கட்டணம் ரூ.400 ஆகும். இக்கட்டணத்தை **"நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்"** பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் **297 100 199 025 039** கணக்கிற்கு வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட வைப்புச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் அகற்ற முடியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். (வைப்புச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாததுடன் காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், 8 ½" x 12" (A4) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்காக கணினியினால் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தலாம்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்துக் கொள்ளவும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் உள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகவா என விண்ணப்பதாரி தேடிப்பார்த்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி மூலமே தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத்தபாலில் 2019, **பெப்புருவரி 11** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழு செயலகம், கொழும்பு 12" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவைக்குரிய **நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம் /தமிழ் ) (சிங்களம் /ஆங்கிலம்) (தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2018"** என்பதனை தெளிவாக எழுத வேண்டும். இத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொலிஸ் சேவையில் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,40,360.00 இற்கு அதிகமான அடிப்படை வருடாந்த சம்பளத்தைப் பெறும் பகிரங்க சேவைக்குரிய நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

(எ) பரீட்சைக்கு தோற்றல் - அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு என்பவற்றுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தில் விசாரிக்குமாறு தெரிவிப்பதுடன் கொழும்புக்கு வெளியே வதியும் விண்ணப்பதாரிகள்

எனின் தொலைநகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியினைப் பெற்றுக்கொள்வதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் மற்றும் மேற்குறிப்பிட்ட விபரங்களையும் உள்ளடக்கிய கோரிக்கைக் கடிதமொன்றை 0112 421 206 அல்லது 0112 446 111 இலக்கங்களுக்கு அனுப்புவதுடன் அது தொடர்பில் விசாரித்தல் பயன்மிக்கதாக இருக்கும்.

11. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம்** - விண்ணப்பதாரர் ஒருவர் தாம் தோன்றும் எல்லா விடயதானங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

ஆ) செல்லுப்படியான கடவுச்சீட்டு.

12. **பரீட்சைக்கு உள்நுழைதல்:**

(அ) எல்லா விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக்கு தோற்றும் முதலாம் நாள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். இவ்வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் சகல விண்ணப்பதாரர்களும் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்களின் தொகுதியொன்று குறிப்பிடப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படுதல் வேண்டும். அவ்விதிகளை மீறினால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு** - விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதலானது அவ் விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

13. இவ் ஒழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின் அவ்விடயங்கள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வடிவங்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச்.எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2019, சனவரி 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் (சிங்களம் /தமிழ் ) (சிங்களம் /ஆங்கிலம்) (தமிழ் /ஆங்கிலம்) தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2018**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

01. மொழி மூலம் :

பரீட்சைக்கு தோற்றும் மொழி

சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

02. பிரத்தியேக தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..............................................................................................
(முதலெழுத்துக்களை பின்னால் குறிப்பிடுக.)
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) உதாரணம் : SRIWARDANA, A.P.K.

2.2 முழுப்பெயர் : ...................................................................................................................
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

2.3 முழுப்பெயர் : ...................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.4 பிரத்தியேக முகவரி : ...........................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.5 வசிக்கும் மாவட்டம் : ...........................................................................................................

2.6 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ..................
.....................................................................................................................................................

2.7 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | |

2.8 பிறந்த திகதி :
வருடம் | | | | | மாதம் | | | திகதி | | |

2.9 2019.01.11 ஆந் திகதிக்கு வயது
வருடங்கள் : | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

2.10 பால் நிலை : ஆண் - 1 பெண் - 2 | |
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

2.11 சிவில் அந்தஸ்த்து : திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 | |
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

2.12 தொலைபேசி இலக்கம் :

நிலையானது : ........................ கையடக்க தொலைபேசி : ..............
தொலைநகல் : ....................

03. **கல்வித் தகைமைகள் :**

3.1 க.பொ.த. (சா./த.) பரீட்சை தொடர்பான விபரங்கள்:

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................

(2) பரீட்சை சுட்டெண் : ............................

(3) பெறுபேறுகள் :

| விடயம் | தரம் | விடயம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

3.2 க.பொ.த.(உ/த) பரீட்சை தொடர்பான பெறுபேறுகள் :

(1) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் : ............................

(2) பரீட்சை சுட்டெண் : ............................

(3) பெறுபேறுகள் :

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

04. விண்ணப்பிக்கும் உரைபெயர்ப்பாளார் பதவி

சிங்களம் - தமிழ் 1
சிங்களம் - ஆங்கிலம் 2 ☐
தமிழ் - ஆங்கிலம் 3

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

05. வேறு தகைமைகள் : .............................................................................................................................

.............................................................................................................................................

06. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?

(உரிய கூட்டினுள் ( √ ) அடையாளமிடுங்கள்), (ஆம் எனின், விபரங்களை குறிப்பிடுக.)

.......................................................................... ஆம் ☐ இல்லை ☐

..........................................................................

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் : ...................................

பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....................................

செலுத்திய பணம் : ...................................

பற்றுச்சீட்டினை அகற்ற முடியாதவாறு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை உங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாய் இருக்கும்.)

08. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதும் என தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் யாதேனும் பகுதிகள் நிரப்பப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக நிரப்பப்படுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இதில் அனைத்து பகுதிகளும் சரியான முறையில் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட கூற்று பிழையானது என நிரூபிக்கப்பட்டால், நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவர் ஆவதற்கும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் முடியும் என்பதனை நன்கறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவதுடன் தொடர்புடையதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கு நான் கீழ்படிகின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

..................... ......................................
திகதி விண்ணப்பதாரியன் கையொப்பம்

09. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .............................. என்பவரை நான் பிரத்தியேக மான முறையில் நன்கறிவேன் என்பதனையும், எனது முன்னிலையில் ......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் என்பதனையும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதனையும் அப்பற்றுச்சீட்டினை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதனையும் சான்றுப்படுத்துகின்றேன்.

.............................. ..............................................
திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ............................

பதவி : ....................................................

முகவரி : ..................................................

(உத்தியோகப்பூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்துக.)

**திணைக்களத் தலைவரின் சிபாரிசு**

இந் ............................................. சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ...........................என்பவருக்கு நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவையின் நீதிமன்ற உரைபெயர்ப்பாளர் தரம் III இற்குரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான கல்வித் தகைமைகளை கொண்டுள்ளார் என்பதனையும், விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 32 வயதிற்கு மேற்படாதவர் என்பதனையும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் தெரிவித்து, விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

திகதி :- .............................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
(உத்தியோகபூர்வ முத்திரை).

1-500/1

---

## நீதிச் சேவை ஆணைக்குழு

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம் /தமிழ் /ஆங்கிலம்) தரம் **III** இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2018

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையுடைய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சையானது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். நீதிச் சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இப்பரீட்சையினை ஒத்தி வைப்பதற்கான அல்லது செல்லுபடி யற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

2. **சேவை நிபந்தனைகள்:**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 11.09.2018 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக்குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும்

எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

2.2 இந்நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டு 05 வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்.

2.3 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்குத் தவறும் மற்றும் / அல்லது நியமனம் பெற்ற பதவியில் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக உள்ளது.

3. சம்பளம் அளவுத்திட்டம் : 03/2016 மற்றும் அதற்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 24.06.2016 ஆந் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் தரம் III இற்குரிய (MN 2 -2016 ) ரூ. 28,940 – 10 x 300 – 11 x 350 – 10 x 560 – 10 x 660 - ரூபா 47,990 (ஆரம்ப சம்பளம் ரூபா 28,940) ஆவதுடன் அச்சம்பளம் 01.01.2020 ஆந் திகதி தொடக்கம் உரித்தாகும். மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. பகிரங்க சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் பதவிகள் ஓய்வூதியத்துடனானவை என மேலே குறிப்பிடப்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் தரம் III இல் நியமனம் பெறும் உத்தியோகத்தர்களுக்குரிய ஓய்வூதிய முறைமையானது அரசாங்கத்தினால் மற்றும் / அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களால் நிர்ணயிக்கப்படும்.

5. **தகைமைகள்.**

அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க உத்தியோகத்தர் சேவைக்குரிய நீதிமன்ற முகாமைத்துவ உதவிச்சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் தரம் III இற்குரிய பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழ்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(உ) கீழ்வரும் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் சிங்களத்திலும், நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமிழ் மொழியிலும், நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழியிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

மற்றும்

II. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, தொழில்நுட்ப கல்லூரி அல்லது அரச பதிவுடைய பயிற்சியளிக்கும் நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பாடநெறியினை சிறந்த முறையில் பயின்று அதில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு –** சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2019, சனவரி 11 ஆந் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **பரீட்சை நடபடிமுறைகள்.**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தமக்குரிய ஒரு மொழியை மாத்திரம் தெரிவு செய்ய வேண்டியதுடன் பரீட்சைக்குரிய சகல வினாப்பத்திரங்களுக்கும் அம்மொழி மூலமே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

இப்பரீட்சையானது மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | மொழித்திறன் | 100 | 40 |
| 02. | உளச்சார்பு | 100 | 40 |
| 03. | சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து | 100 | * |

(* வெற்றிடங்களின் எண்ணக்கையினை கருத்திற் கொண்டு சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பரீட்சையில் சித்தியடைய தேவையான புள்ளி மட்டமானது நீதிச் சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.)

**பரீட்சைக்கான பாடத்திட்டம்.**

1. மொழித் திறன் :-

இவ்வினாப்பத்திரம் விண்ணப்பதாரிகளின் கருத்து தெரிவித்தல், கிரகித்தல், எழுத்தறிவு, மொழி மற்றும் கட்டுரை, கடிதம் ஒன்றுக்கான பரும்படியைத் தயாரித்தல், வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வரைபுகள் மற்றும் அட்டவணைகள் தயாரித்தல், சுருக்கம் எழுதுதல், தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பயன்பாடு தொடர்பிலான அறிவைப் பரீட்சிக்கும் விடயரீதியான வினாக்களைக் கொண்டதாகும்.

2. உளச்சார்பு :-

இவ்வினாப்பத்திரமானது விண்ணப்பதாரிகளின் எண் சார்ந்த திறன், தர்கிக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை அளவிடும் வகையிலான விடயப்பரப்பிற்குரிய வினாக்களைக் கொண்டதாக அமையும்.

